# ஆஅய் எயினன் எனும் அதிகன் Aaay Eyinan alias Athikan

**கண்மணி கணேசன் ச. | Kanmani Ganesan S.**[1]ORCID

[1] Former etired Principal & HOD in Tamil, Srikaliswari college, Sivakasi in Tamilnad. India. E mail: kanmanitamilskc@gmail.com, DOI: 10.5281/zenodo.13294296

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

பண்டைத் தமிழகத் திணைமாந்தருள் ஆஅய் எயினன் எனும் அதிகனின் தலைமைத் தன்மையை அவனது தனிச்சிறப்புடன் எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அதிகனைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள; ஒட்டுமொத்தத் தமிழகத்தின் அரசியல் நிலையும் அடித்தளமாக அமைவது இக்கட்டுரையின் சிறப்பு ஆகிறது. விளக்கமுறை ஆய்வாக அமையும் இக்கட்டுரைக்கு முதனிலைத் தரவுகளாகப் பரணர் பாடிய அகநானூறு 142, 148, 181, 208, 396 ஆகிய ஐந்து பாடல்கள் அமைய; இரண்டாம்நிலைத் தரவுகளாகப் பிற தொகைநூல்கள், ஆய்வாளர் கருத்துகள், உரையாசிரியர் விளக்கங்கள் ஆகியன அமைகின்றன. அதிகனின் இனம், வீரம், வலிமை, படை, இளகிய மனம், கடமை உணர்வு, தனிச் சிறப்பு ஆகியவற்றை வரையும் போது; அவன் பறவைகள் மேல் கொண்ட அன்பு தற்குறிப்பேற்ற அணி நயத்துடன் புலப்படுகிறது.

This article aims to expose the leadership qualities and a unique pride of Aay Eyinan alias Athikan; a person among thinaimaanthar. The politics prevailed in the whole of Tamilnad forming the basement to derive a clear picture of Aay Eyinan is the special feature of this article. The five hymns sung by Paranar in Akanaanuuru viz.142, 148, 181, 208, and 396 serve as primary sources. Other lyrics of the anthologies, ten idylls, views of the commentators and findings of the researchers serve as the secondary sources for this descriptive study. While drawing the qualities like clan, valor, power, forces, perfection in duty, kind-heartedness, and love for birds; a unique character of Aay Eyinan; tharkuripperram the aesthetic technique is found along with.

**திறவுச்சொற்கள் (Keywords):** ஆஅய், எயினன், அதிகன், நன்னன், வெளியன், அகுதை

## முன்னுரை

பண்டைத் தமிழகத் திணைமாந்தருள் ஆஅய்எயினன் எனும் அதிகனின் தலைமைத் தன்மைகளையும் தனிச்சிறப்பையும் வரைவது இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். அதற்கு ஒட்டு மொத்தத் தமிழக அரசியல் சமூகநிலை அடிப்படையாக அமைவது; இக்கட்டுரைக்குத் தனிச்சிறப்பு நல்குகிறது. விளக்க முறை ஆய்வாக அமையும் இக்கட்டுரைக்கு முதனிலைத் தரவுகளாகப் பரணர் பாடிய அகநானூறு 142, 148, 181, 208, 396 ஆகிய ஐந்து பாடல்கள் அமைய; துணைநிலைத் தரவுகளாகப் பிற தொகைநூல்களும் உரையாசிரியர், ஆய்வாளர் கருத்துகளும் அமைகின்றன.

## அதிகன் காலத்துத் தமிழக அரசியல் - ஒரு பருந்துப் பார்வை

தொகையிலக்கியத்தில் வேந்தர், குறுநில மன்னராகிய வேளிர், திணைமாந்தரின் சார்பாளர் என முத்திறத் தலைவரைக் காண இயல்கிறது. அவர்கள் இடையே நிலவிய அரசியல் பற்றிய பரந்த பார்வை அதிகனுக்கும் மிஞிலிக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் காரணத்தைத் தெளிவிக்கிறது. இரண்டு வேளிர் முரண்படும் போது; போர்க்களத்தில் அவரைச் சார்ந்து வாழ்ந்த திணைமாந்தர் இருவர் படைத்தலைமை ஏற்று நேருக்கு நேர் நின்று போர் செய்தனர்.

**வேந்தரும் வேளிரும்**

வேளிர் கொள்கை மாறுபாட்டால் இருகூறுபட்டு இருந்தனர். தம் வேளாண்மையையும் மகள்களையும் காக்க வேந்தரை எதிர்த்துப் போராடியோர் ஒருபுறமும்; நாட்டையும் மக்களையும் காக்கத் தம் மகளை வேந்தருக்கு மணமுடித்துக் கொடுத்து அழிவைத் தவிர்த்தவர் மறுபுறமும் இருந்தனர்.

வேந்தர் தம் மகளைப் பெண்கேட்க; வேளிர் எதிர்த்து நின்ற நிகழ்வுகள் மகட்பாற்காஞ்சிப் பாடல்களாக உருப்பெற்றன. வேந்தரை நேரடியாகச் சுட்டியோ; அல்லது அவர்களது மாலை, யானைப்படை, தலைநகர் ஆகியவற்றைக் குறிப்பிட்டோ அப் பாடல்கள் அமைந்து உள்ளன. புறநானூற்றில் உள்ள இருபது மகட்பாற்காஞ்சிப் பாடல்களுள் (பா.336-355) பதினாறு பாடல்களில் வேந்தர் பெண் கேட்கின்றனர். (பா.336, 337, 338, 339, 341, 343, 344, 345, 347, 348, 350, 352, 352, 353, 354, 355).

சிதைந்த பாடலாக இருப்பினும் 'கிள்ளி' எனும் பெயர் நேரடியாக இடம் பெற்றுப் பெண் கேட்டவன் சோழன் என அடையாளம் காட்டுகிறது (புறம்.355). 'முசிறி' என்ற பெயர் சேரனை அடையாளம் காட்டும் பாடலும் உளது (புறம்.343).

பரணரும் கபிலரும் அரிசில் கிழாரும் பதிற்றுப் பத்தில் முறையே கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் (5ம் பத்து) செல்வக் கடுங்கோ வாழியாதன் (7ம் பத்து) பெருஞ் சேரலாதன் (8ம் பத்து) ஆகியோரைப் பாடியோர் ஆவர்.

பெண்ணுக்காகப் போர்க்குத் தயாரான வேந்தனால் குறுநில மன்னனின் வயல்சூழ்ந்த ஊர் கவின் அழியப் போகிறது எனப் பரணர் பதறும் போது; பெண் கேட்ட வேந்தன் யார் என்ற குறிப்பு இல்லை. எனினும் பரணர் காலத்து அரசியல் சூழல் குறிப்பிடத் தக்கது ஆகிறது.

யானையோடு சூழ்ந்த வேந்தர்க்கு; மகளைத் தர மறுத்த குறுநில மன்னனைக் கபிலர் பாடும் போது (புறம்.337); பெண் கேட்டவன் சேரன் என்று முடிபு சொல்ல இயலாது. கபிலரே பாடி இருப்பது; அவர் காலத்தில் வேந்தர், வேளிர் இடையே இருந்த சிக்கலைத் தெளிவாக்குகிறது.

தண்பணை மன்னன் வேந்தனுக்கு மகளைத் தரமறுத்ததை அரிசில்கிழார் பாடும் போது (புறம்.342); பெண் கேட்டவன் பெருஞ் சேரலாதன் தான் என முடிபு கூற முடியாது. எனினும் பாடியவர் அரிசில் கிழார் ஆதலால்; அவர் காலத்து அரசியல் விளக்கம் பெறுகிறது.

இத்தகு போராட்டங்கட்கு இடையில் வேளாவிக் கோமான் பதுமனின் இருமகள்கள் முறையே இரும்பொறை, உதியன் ஆகிய இருமரபுச் சேரரை மணந்தனர். இவை பதிற்.4,8ம் பத்துப் பதிகங்கள் தரும் செய்திகள் ஆகும்.

**வெளியன் வேண்மானும் வேள் நன்னனும்**

உதியன் சேரலாதனுக்கு மகள் நல்லினியை மணம் செய்து கொடுத்துத் (பதிற்.2ம் பத்தின் பதிகம்); தன் நாட்டையும் மக்களையும் அழிவில் இருந்து காத்த வெளியன் வேளின் கொள்கையோடு வேள் நன்னன் முரண்பட்டான். கொற்ற யானையும் கொடித்தேரும் கொண்டு; சுடர்ப்பூண் புனைந்து; அகழி சூழ்ந்த பாழியில் வேந்தர்க்கு இணையான ஆடம்பரத்துடன் வாழ்ந்த நன்னன் வேந்தரையும் அவர்க்குத் துணை நின்ற கோசரையும் தீவிரமாக வெறுத்தான். ஏனெனில் வேந்தரால் வேளிரது நெல் வேளாண்மை பாதிக்கப்பட்டது. வயல்கட்கு எரியூட்டி; நீராதாரங்களைப் பாழாக்கித்; தம் ஆட்சிப் பரப்பை விரித்து; மீண்டும் தலையெடுக்க ஒட்டாது அழித்து; வேந்தர் தம் மேன்மையை நிலைநாட்டினர்.

இமயவரம்பன் பகை வேளிரை அழித்த பாங்கு மிக விரிவாகப் பேசப்படுகிறது (பதிற்.13, 15, 19). பல்யானைச் செல்கெழு குட்டுவன், பெருஞ் சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய வேந்தர் முன் வேளிர் பணிந்து நடுங்கி நின்றனர் (பதிற்.30, 75, 88). கரிகாலன் வேளிர் வயலை எரித்துப் பாழாக்கினான் (பட்டி.283-284, 240-270). ‘வெண்ணெல் வேலித் தித்தனை’ வென்று உறந்தையைப் பெற்றான் (புறம்.352). நெடுஞ் செழியனும் அதே

போல் பெருமை பெறுகிறான். அவன் எரி பரப்பிய நன்செய் காடானது (மது. 55-61, 126, 154-156, 169-176). வேள் எவ்வியின் மிழலையைத் தனதாக்கினான் (புறம்.24).

இளஞ்சேரல் இரும்பொறை தான் அடிப்படுத்திய குறுநில மன்னர் நாடுகளை கொள்ளை இடுவதற்குப் பதிலாக; எரி ஊட்டிய காரணத்தைப் புலவர்; 'கொள்ளை அடித்து விட்டுவிடின் மீண்டும் தலைதூக்கி விடுவான் எனவே; தீக்கிரை ஆக்கினான்' என்கிறார் (பதிற்.81).

மகள்மறுத்து வேந்தரோடு வேளிர் போரிடத் தயார் ஆவதால் நிகழ இருக்கும் அழிவை எண்ணிப் பல பாடல்களில் புலவோர் நொந்து புலம்புகின்றனர் (புறம்.336, 337, 341, 344, 345, 346, 347, 348, 351, 354).

வேளாண்மைக் காவல் பெரும் சவாலாக இருந்த இத்தகைய சூழலில் தன் தோட்டத்து மாமரத்தின் பழத்தை உண்டமைக்காக ஒரு கோசர் குலப் பெண்ணுக்கு மரண தண்டனை விதித்துப்; பிடிவாதமாக அதை நிறைவேற்றும் அளவிற்கு; வேந்தர், அவர் பின் நின்ற கோசர் ஆகியோர் மேல் வெறுப்பை நன்னன் வளர்த்து இருந்தான் (குறு.292).

**நன்னனும் புன்னாட்டு அரசனும்**

புன்னாட்டுக் குறுநில மன்னனின் போக்கு நன்னனின் போக்கோடு மாறுபட்டதால் அவரிடையே பகை தோன்றியது.

"கொடித்தேர்ப் பொலம்பூண் நன்னன் புன்னாடு
கடிந்தென" (அகம்.396)

என்ற பாடலடிகளில் இப் பகைமை வெளிப்படுகிறது. புன்னாட்டு மன்னனிடம் தன் சினத்தைக் காட்ட நன்னன் முற்பட்ட போது; புன்னாடனுக்குத் துணையாக வெளியன் தனது கழனிகாவல் படையை ஆஅய்எயினன் தலைமையில் அனுப்பி வைத்தான்.

**திணைமாந்தரும் அரசரும்**

திணைமாந்தருள் சிலர் குறுநில மன்னர்க்கு ஆதரவாகவும்; சிலர் வேந்தரைச் சார்ந்தும் போர் செய்தனர். மிஞிலி எனும் வேட்டுவர் தலைவன் வேள் நன்னனுக்காகவும்; அதிகன் எனும் எயினர் தலைவன் வெளியன் வேளுக்காகவும் அகுதை எனும் திணைமாந்தன் பாண்டிய வேந்தனைச் சார்ந்தும் போர் செய்தனர்.

நன்னன் புன்னாட்டு மன்னனை அடக்க நவிரமலையின் வேட்டுவர் தலைவன் ஆகிய மிஞிலியைப் பொறுப்பாளன் ஆக்கினான். மிஞிலி வேட்டுவக் குடியினன் என்பது;

"இறுகுபுல் மேய்ந்த அறுகோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை
வீளை அம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோள் யாப்பின் மிஞிலி" (நற்.265)

என்ற அகப்பாடலில் தெரிகிறது. வயோதிகத்தால் உதிர்ந்த கொம்பினை உடையதாய்; காய்ந்த புல்லை மேய்ந்த கலைமானைத் துரத்தி; அது சேற்றில் ஆடிப் புள்ளிகளுடன் தோன்ற; வீளை அம்பினால் வீழ்த்துவோர் தலைவன் மிஞிலி என்பதால் அவன் வேட்டுவர் தலைவன் என உறுதி ஆகிறது. தோள்கவசம் அணிந்து மிஞிலி போர்மேற் சென்றான்.

"... ஒன்னார் / ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி" (அகம்.181)

என அவன் குறுநில மன்னனாகிய புன்னாடனின் அரண்மனையை அழித்த பெருமை பாடல் பெறுகிறது. வேட்டுவர் தலைவன் ஆதலால் அவனது படையாக வேட்டுவர் இருந்தனர் என உணர முடிகிறது.

ஆஅய்எயினன் வீழ்ந்த பின்னரும் நன்னனின் சினம் சிறிதும் அடங்கவில்லை. புன்னாட்டு அரசனின் பெண்டிர் மிகுந்த அச்சம் கொண்டு பதறி நடுங்கினர் என்பதால் போரில் புன்னாட்டு அரசனும் வீழ்ந்தான் என்று உய்த்து உணர இயல்கிறது. அவனது பெண்டிரைக் காக்கத் தனது பெரும் போர்ச் சுற்றத்துடன் பாண்டியனின் படைத்தளபதி ஆகிய அகுதை மிஞிலியோடு போரைத் தொடர்ந்தான்.

"பெருவிதுப்பு உற்ற பல்வேள் மகளிர்
குரூஉப் பூம்பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்கு பெருந் தானை
அகுதை களைதந் தாங்கு" (அகம்.208)

என்பதால் இதனை அறிகிறோம். 'இன்கடுங் கள்ளின் அகுதை' (குறு.298) என்ற அடைத்தொடர் நன்கு புளித்துப் போதை ஏற்றக் கூடிய கள்ளை அகுதையின் பெருமைக்கு உரிய செல்வமாகப் பேசுவதால் அவன் திணைமாந்தன் என்பது உறுதிப்படுகிறது. அவன் 'குண்டுநீர் வரைப்பிற் கூடல்' பகுதியைச் சார்ந்தவன் (புறம்.347) என்பதால் பாண்டிய வேந்தனோடு தொடர்பு உடையவன் ஆகிறான்.

**அதிகன் எயினர் குடியினன்**

ஆஅய் எயினன் என்ற பெயரிலேயே தான் சார்ந்த இனப் பெயரைத் தாங்கிய அதிகன் வெளியன் வேண்மானின் வேளாண்மைக்குத் துணை நின்ற வீரம் மிகுந்தவன் ஆவான். எயினர் தலைவனாகிய அவன் 'ஆஅய்' எனும் சிறப்புப் பெயரைப் பெற்றான். பறவைகளிடம் நிகரற்ற அன்பு கொண்ட அவனுடன் அவனது ஊர்மக்கள் ஆகிய எயினர் படை இருந்தது. ஆஅய் எயினனின் இயற்பெயரே அதிகன் ஆகும்.

கடிது ஓடும் குதிரையில் ஏறி ஆஅய் எயினன் மிஞிலியோடு போரிட்டுக் களத்தில் உயிர் நீத்தான். இதனை,

"கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெடன" (அகம்.148),

"மிஞிலி… அதிகற் கொன்று உவந்து
ஒள்வாள் அமலை ஆட்டிய ஞாட்பு" (அகம்.142)

என்ற பரணரின் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. ஆஅய்எயினனும் அதிகனும் ஒருவரே என்பதை உரையாசிரியர் 'அதிகன் என்பது ஆஅய்எயினனுக்கு உரிய வேறு பெயர் போலும்' என்கிறார் (அகநானூறு மணிமிடை பவளம்- ப.58).

**ஈரநெஞ்சம் கொண்ட வெளியனும் அதிகனும்**

"...அகவுநர் வேண்டின் வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கை" (அகம்.208)

என்ற பாடல்பகுதி ஆஅய்எயினன் வெளியனைச் சார்ந்து வாழ்ந்தவன் எனக் காட்டுவதுடன்; வெளியன் வேளுக்கும் ஆஅய்எயினனுக்கும் இடையில் இருந்த நெருக்கத்தையும் ஒத்த பண்பையும் காட்டுகிறது. இருவருக்கும் இரக்க சிந்தை இருந்தது. வேளாண்மையில் ஈடுபடுவோர் பெண் யானைகளைப் பரிசாகக் கொடுத்து விடுவர். ஏனெனில் அவை கன்றுகளை ஈன்று இனத்தைப் பெருக்குவது வேளாண்மைக்கு இடையூறாகி விடும். ஆனால் நெல் வேளாண்மைக்காக உழுவித்த வெளியன் அகவுநர் விருப்பத்திற்கு ஏற்பக் களிறையும் பரிசாகக் கொடுக்கும் அளவு வள்ளன்மையும் செல்வமும் மிகுந்தவன். ஆஅய்எயினனோ தன் வாழ்நாள் முழுவதும் பறவைகளின் பால் அன்பைப் பொழிந்து அவற்றின் பேரன்பைப் பெற்றவன். உயிர்கட்கு இரங்கும் அவனது வாழ்க்கை முறை 'அளியியல்

வாழ்க்கை' எனப் புகழப் பெறுகிறது. அவன் பறவைகளின் பால் கொண்ட காதல் வெளிப்படுவதாக அவனது வாழ்வின் இறுதிக்கட்டம் அமைந்தது.

உரையாசிரியர் 'வெளியன் வேண்மானாகிய ஆஅய்எயினன் எனவும்... எயினன் என்பான் வேளிர் குடியினன்' எனவும் கூறிச் செல்கின்றனர். ஆனால் 'வெளியன் வேண்மானின் கழனிப் பொறுப்பாளன் ஆகிய ஆஅய்எயினன்' என ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகக் கொண்டு பொருள் கொள்வதே பொருத்தம் உடையது ஆகிறது. ஏனெனில் வேளிர் உழுவித்த வேளாளராகிய வந்தேறிகள் எனத் தொன்மவியல் அடிப்படையில் மு.இராகவையங்கார் நிறுவி உள்ளார் (வேளிர் வரலாறு- ப.1-26). உ.வே.சாமிநாதையரும் வேளிரை உழுவித்தவர் என்கிறார் (புறநானூறு- பாடப்பட்டோர் வரலாறு- ப.77 அடிக்குறிப்பு). எயினரோ தமிழகத்துப் பூர்வகுடியினர் என்பதில் மாற்றுக் கருத்து எழ வழி இல்லை. தொகை இலக்கியத்தில் அவரது வாழ்க்கைமுறை, தோற்றம், உணவு, விருந்தோம்பும் பண்பு, எளிமை என அனைத்தும் விரிவாக இடம் பெறுகின்றன (ஐங்.364, 365; குறு.12; அகம்.79, 319; புறம்.177, 181; சிறு.175; பெரு.94-95; பட்டி.266). வேளிர்க்காக வேளாண் தொழில்களில் ஈடுபடுவோர் கிழார் என்றோ; ஊரன் என்றோ; தலைவராகப் பேசப்படுவதையும்; இடப் பெயருடன் சேர்த்து அழைக்கப்படுவதையும் தொகை இலக்கியம் எங்கும் காண இயல்கிறது. வாகை என்னும் ஊர்த் தலைவனாக ஒரு எயினன் பாடல் பெறுவதும் (புறம்.351); இக்கருத்தை ஆதரிக்கிறது. இவ் எயினனே ஆஅய்எயினன் என முடிபு கூற இயலாது எனினும்; எயினர் இனத்தைச் சேர்ந்தோர் ஊர்த் தலைவராக இருந்தமையை உறுதிபடக் கூற வழி செய்கிறது.

**அதிகனின் படையும் பட்டமும்**

வேளிருள் 'ஆஅய்' எனும் குடி மிகுந்த புகழ் பெற்ற குடியாக இருந்தது. வெளியனிடம் ஆஅய்எயினன் கொண்ட நெருக்கம் நெல் வேளாண்மையைக் காத்த அவனது சாதனைக்கு 'ஆஅய்' எனும் சிறப்புப் பெயரைப் பெற்றுத் தந்தது எனக் கருத இடம் உளது. ஏனெனில் 'வெள்ளத் தானை அதிகன்' (அகம்.142) என்ற அடைமொழியைப் பரணர் ஆஅய்எயினனுக்கு அளிக்கிறார். உழுவித்த குறுநில மன்னர்க்கு அவரது பணியாட்களே போர்மேற் சென்றனர் என்பது ஏற்கெனவே நிறுவப்பட்ட உண்மை ஆகும் (Kanmani Ganesan,S., "Features Differentiating Venthar, Velir and Leaders Among Thinaimaanthar", Journal of Indian Studies, Vol.14 No.1, (2021). pp. 55-62, ISSN - 1675-171X). வெளியன் களிறைத் தானமாக வழங்கும் அளவிற்கு வசதி படைத்தவன் ஆதலால்; அவனிடம் மிகுந்த பணியாட்கள் இருந்திருப்பர். ஆஅய் எயினன் வெளியனைச் சார்ந்து வாழ்ந்த தலைவன் என்பதால்; வெள்ளம் போல மிகுந்த சேனை உடையவன் என அடைமொழி தருகிறார் பரணர். கழனிகாவலில் ஈடுபட்டோர் அனைவரும் அவனது சேனை ஆவர்.

ஆய்வாளர் 'ஆஅய்எயினன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் படைத்தளபதி' என்று கூறுவதை ஏற்க இயலவில்லை (அப்பாத்துரையார் கா.- தென்னாட்டுப் போர்க்களங்கள், ப.98). அப்படி அவர் எண்ணக் காரணமாக அமைந்தது எது எனக் காண வேண்டி உளது. நன்னனைக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் போரில் வீழ்த்தினான் எனப் பதிற்.40 பாடுவதால்; அதற்கு முன்னதாக நன்னனை எதிர்த்துப் போரிட வந்தவன் அச்சேரனின் படைத் தளபதியாகத் தான் இருக்க வேண்டும் என ஊகித்துக் கூறி உள்ளார். ஆனால் அவன் வெளியனின் வேளாண்மைக்குத் துணை நின்றவனே என்பது பண்டைத் தமிழகச் சமூகச் செய்திகளால் புலனாவது கண்டோம்.

**அதிகனின் கடமை உணர்வும் வலிமையும் வீரமரணமும்**

மிஞிலியை எதிர்த்துப்; பலர் வீரமரணம் அடைந்த போர்க் களத்தில்; முருகப் பெருமான் போல வலிமையோடு போரிட்டுப்; புண்பட்டுக்; குருதி சிந்த ஆஅய் எயினன் வீழ்ந்தான்.

> "...மிஞிலி செருவிற்கு உடைஇ
> முருகுஉறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப
> ஆஅய் எயினன் வீழ்ந்தென"ப் (அகம்.181)

பாடுவது அவனது வீரத்திற்கு விளக்கமாகிறது.

நன்னனது பாழியில் இப்போர் நடந்ததாகப் பரணர் பாடி உள்ளார்.

"நன்னன்…
யாழிசை மறுகிற் பாழி ஆங்கண்
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன்" (அகம்.396)

எனப் பேசுவது; கடமை ஆற்றுவதில் ஆஅய்எயினனது முழு ஈடுபாட்டைக் காட்டுகிறது. புன்னாட்டு மன்னனின் அச்சத்தை நீக்கித் துணையாக நின்று போரிட்ட ஆஅய்எயினன் மிஞிலியால் கொல்லப்பட்டான்.

**அதிகன் பறவைகளிடம் கொண்ட அன்பு**

"புள்ளிற்கு ஏமமாகிய பெரும்பெயர்…அதிகன்" (அகம்.142)

என ஆஅய்எயினன் பறவைகள் மேல் கொண்ட அன்பு பெருமை பெறுகிறது. பட்டப் பகலில் கடும் வெயிலில் வாளால் வெட்டுப் பட்டுப் புண்ணினின்று குருதி சோர்ந்து வீழ; அவன் பேணிப் பாதுகாத்த பறவைக் கூட்டம் அவன் மேல் வெயில் படாதவாறு மேலே பறந்து சூழ்ந்து நிழல் செய்ததை;

"ஆஅய் எயினன் … மிஞிலியொடு நண்பகல்…
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறாமைச் சிறகரில் கோலி
நிழல்செய்து உழறல்" (அகம்.208)

என்ற பாடலில் பரணர் காட்சிப் படுத்துகிறார். இதே காட்சியை;

"ஆஅய் எயினன் வீழ்ந்தென ஞாயிற்று
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர ஆடி மொசிந்து உடன்" (அகம்.181)

என இன்னொரு பாடலிலும் வருணிப்பது இந் நிகழ்வின் வரலாற்றுப் பெறுமதியை உறுதி செய்யத் துணை ஆகிறது. கதிரவனின் வெம்மையை மறைத்துப் பறவைக் கூட்டம் ஒருசேர இயைந்து ஆரவாரத்துடன் வானிலே வட்டமிட்டு நிழல் செய்ததாம். வெளியன் ஆண்ட ஆஅய்எயினனின் வாழ்விடத்தில் இருந்து போர் நடந்த நன்னனின் பாழிக்கு வந்ததால் புதிதாக வந்த பறவைகள் என்கிறார் பரணர்.

போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த அதிகனுக்குப் பறவைகள் அனைத்தும் சேர்ந்து நிழல் தந்தமை இயற்கையில் நடக்கக் கூடியதே. ஆனால் அப்பறவைக் கூட்டத்தொடு சேர இயலாத; பகலில் கண் தெரியாக் கூகையைப் பாடும் பரணர் 'தன் குறையை எண்ணி நாணம் கொண்டது' என்கிறார்.

"காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங்கு" (அகம்.148)

எனப் பாடும் போது; கூகை அன்பிற்கு உரிய ஆஅய்எயினன் வீழ்ந்து கிடப்பதைக் காண இயலாமலும்; பிற பறவைகளைப் போல் நிழற்ற இயலாமலும் நாணம் கொண்டது எனப் புலவர் தன் குறிப்பைப் பறவையின் மேல் ஏற்றி உள்ளார். ஆஅய் எயினனின் பறவை போற்றும் தனிப்பண்பு தற்குறிப்பேற்ற அணிக்கு இடம் அளித்து உள்ளது. தொகையிலக்கியப் பாடலில் மனிதர் மனநிலை பறவையின் மனநிலை ஆக; ஆஅய்எயினனின் பறவைக் காதல் வழி வகுத்து உள்ளது.


DOI: 10.5281/zenodo.13294268

அதிகனுக்கு பறவைகள் நிழல் செய்ததைக் கூட களத்தில் வந்து காண நன்னன் தயாராக இல்லை. அவனது சினம் பொருந்திய செயல்;

"காணேன் யான்எனப் படுகளம் காண்டல்
செல்லான் சினம் சிறந்து உருவினை நன்னன்
அருளான் கரப்ப" (அகம். 208)

எனப் பாடல் பெற்றுள்ளது. 'களத்திற்குள் நுழையத் தயாராக இல்லாத நன்னனையே குறிப்பாகக் கூகை எனச் சுட்டியதாகக் கூறுவோரும் உளர்' என்பர் உரையாசிரியர் (அகநானூறு- மணிமிடை பவளம்- ப.72). ஆனால் பாடல்களில் நன்னனின் சினம் தான் பேசப்படுகிறதே தவிர அவன் நாணம் கொண்டதாகக் குறிப்பு இல்லை ஆதலால்; நாணம் கொண்ட கூகை நன்னனைக் குறிப்பது ஆகாது; கூகை பற்றிய பரணரின் தற்குறிப்பேற்றமே ஆகும். தொகை இலக்கியத்தில் தற்குறிப்பேற்ற அணி வேர் கொண்டு உள்ளது என்ற முடிபிற்கு ஆதாரமாக ஆஅய் எயினனின் பறவைக் காதல் அமைகிறது.

**முடிவுரை**

திணைமாந்தருள் சிலர் குறுநில மன்னர்க்கு ஆதரவாகவும்; சிலர் வேந்தரைச் சார்ந்தும் இருந்தனர். முரண்பட்ட வேளிர்க்காகத் திணைமாந்தரே நேரடியாகப் போரில் ஈடுபட்டனர். வெளியன் வேளின் வேளாண்மைக்குத் துணை நின்ற வீரம் மிகுந்த அதிகன் எயினர் தலைவனாய் 'ஆஅய்' எனும் சிறப்புப் பெயரைப் பெற்று இருந்தான். வீரமும் வலிமையும் செயல் திறனும் கடமை உணர்வும் பறவைகளிடம் நிகரற்ற அன்பும் கொண்ட அவனுடன் அவனது ஊராராகிய எயினர் படை இருந்தது. தொகை இலக்கியத்திலும் தற்குறிப்பேற்ற அணி இடம் பெறுகிறது என்ற முடிபிற்குக் காரணமாக அமைவது ஆஅய் எயினனின் பறவைக் காதல் ஆகும்.

**துணைநூற்பட்டியல்**


1. *Aingurunooru.* (2009). *kazhaka veliyeedu, chennai.*
2. *Appaaththuraiyaar,kaa.- Thennaattup Porkkalangal-* III edition- (2014). *poompukaar pathippakam*, Chennai.
3. *Akanaanooru Kalirriyaanai Nirai- Na.Mu.Vengadasami Nattar& Karanthaik Kaviyarasu Raa.Vengatasalam Pillai* (commentators), (2009). Chennai: *Kazhaka Veliyeedu*
4. *Akanaanooru maninidai pavalam (2007). Kazhaka Veliyeedu*, Chennai.
5. *Akanaanooru Niththilakkovai*, (2008). *kazhaka veliyeedu,* chennai.
6. *Kanmani Ganesan,S.*, "Features Differentiating Venthar, Velir and Leaders Among Thinaimaanthar", Journal of Indian Studies, Vol.14 No.1, (2021). ISSN-1675-171X, pp.55-62, https://ejournal.um.edu.my/index.php/JIS/ article/view /31526 /13391).
7. *Kurunthokai- Po.Ve.Somasuntharanaar* (commentator), (2007). *Kazhaka Veliyeedu*, Chennai.
8. *Narrinai*, (2007). *kazhaka veliyeedu,* Chennai.
9. *Pathirruppaththu- kazhaka veliyeedu,* chennai. 2007
10. *Paththuppaattu thokuthi* I, (2007). Chennai: *Kazhaka veliyeedu*
11. *Paththuppaattu* part ii- *kazhaka veliyeedu,* chennai. 2008
12. *Puranaanooru* part i&ii- *kazhaka veliyeedu*, chennai. 2007
13. *Puranaanooru*-U.Ve.Saminathaiyar(editor)- II edition- (1923). Commercial Press, Chennai.
14. *Ragavaiyangar,Mu.- Velir varalaaru,* Madurai *Thamizhch changam*: *Chenthamizh pirasuram.* 1913



DOI: 10.5281/zenodo.13294268